# பழமொழி - 615



தொகுத்தோன்

ஞானவெட்டியான் - திண்டுக்கல்

# பழமொழி - 615

| அகர வரிசை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
| ஆ | கா | சா | தா | பா | மா | நா | யா | வா |
| இ | கி | சி | தி | பி | மி | நி | | வி |
| ஈ | கீ | சீ | | பீ | | | | வீ |
| உ | கு | சு | து | பு | மு | | | |
| ஊ | கூ | சூ | தூ | பூ | மூ | | | |
| எ | கெ | செ | தெ | பெ | | நெ | | வெ |
| ஏ | கே | சே | | பே | மே | | | வே |
| ஐ | கை | | தை | | மை | | | வை |
| ஒ | கொ | சொ | | பொ | மொ | | | |
| ஓ | கோ | சோ | | போ | மோ | | | |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 1 | அகத்தினழகு முகத்தில் தெரியும். |
| 2 | அகல உழுகிறதை விட ஆழ உழு. |
| 3 | அகல் வட்டம் பகல் மழை. |
| 4 | அக்கா இருக்கும்வரைதான் மச்சான் உறவு. |
| 5 | அக்கா வைச்சிருந்தா அரிசி; தங்கை வச்சிருந்தா தவிடு. |
| 6 | அக்காள் ஆனாலும் சக்களத்தி சக்களத்தி தான். |
| 7 | அசடுக்கு வாக்கப்பட்டு ஆயிரம் வருடம் வாழ்வதைவிட, சமத்துக்கு வாக்கப்பட்டு சட்டுன்னு தாலி அறுக்கலாம். |
| 8 | அசைந்து தின்பது யானை; அசையாமல் தின்பது வீடு. |
| 9 | அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது. |
| 10 | அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது. |
| 11 | அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா? |
| 12 | அடக்கமே பெண்ணுக்கு அழகு. |
| 13 | அடக்கம் உடையார் அறிஞர்; அடங்காதவர் கல்லார். |
| 14 | அடாது செய்தவன் படாது படுவான். |
| 15 | அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் தேனும். |
| 16 | அடிக்கடி அழுகிற ஆணையும், அடிக்கடி சிரிக்கிற பெண்ணையும் நம்பாதே. |
| 17 | அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் முகத்துக்கு முன் ஆடும். |
| 18 | அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும். |
| 19 | அடியாத மாடு படியாது. |
| 20 | அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவான். |
| 21 | அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரன் நிம்மதி போச்சு. |
| 22 | அடுப்பிலே இருக்கும் சட்டி பொறுத்தாலும் மூடி பொறுக்காதாம். |
| 23 | அடுப்பே வனவாசம்; கடுப்பே கைலாசம். |

| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 24 | அஷ்டமத்துச் சனி அழுதாலும் விடாது. |
| 25 | அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலும். |
| 26 | அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது. |
| 27 | அதிர்ந்து வராத புருஷனாலும் , மிதந்து வராத அரிசியாலும் பயனில்லை. |
| 28 | அதை விட்டாலும் கதியில்லை; அப்புறம் போனாலும் விதியில்லை. |
| 29 | அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு. |
| 30 | அந்தி மழை அழுதாலும் விடாது. |
| 31 | அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா? |
| 32 | அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான். |
| 33 | அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும். |
| 34 | அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா? |
| 35 | அன்றாடம் குடிக்கத் தண்ணீர் இல்லை; ஆனைமேல் அம்பாரி வேணுமாம். |
| 36 | அப்பன் அருமை மாண்டால் தெரியும். |
| 37 | அயலூரானுக்கு ஆத்தோரம் பயம்; உள்ளூரானுக்கு மரத்தடியில் பயம். |
| 38 | அயல்வீட்டானுக்குப் பரிந்துகொண்டு ஆம்படையானை அடித்ததுபோல். |
| 39 | அரசன் அன்று கொல்வான் ; தெய்வம் நின்று கொல்லும். |
| 40 | அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர். |
| 41 | அரிசி அளக்கும் படிக்கு அரிசியின் விலை தெரியுமா? |
| 42 | அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக் கட்டி(கல்) மூன்று வேண்டும். |
| 43 | அரிசி என்று அள்ளிப் பார்ப்பாரும் இல்லை; உமி என்று ஊதிப் பார்ப்பாரும் இல்லை. |
| 44 | அரிசி பகையும் ஆம்படையான் பகையும் போல்(கணப்பொழுது) |
| 45 | அருக்காணி முத்து கரிக்கோலமானது போல். |
| 46 | அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது. |
| 47 | அரைத்துட்டிலே கலியாணம்; அதிலே கொஞ்சம் வாணவேடிக்கை . |



| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 48 | அற நனைந்தவனுக்குக் குளிரென்ன கூதலென்ன. |
| 49 | அறக்கப் பறக்க பாடுபட்டாலும் படுக்க பாயில்லை. |
| 50 | அறச் செட்டு முழு நட்டம் . |
| 51 | அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான்; வாங்கவும் மாட்டான். |
| 52 | அறமுறுக்கினால் அத்துப் போகும். |
| 53 | அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்கவேண்டும். |
| 54 | அறிய அறியக் கெடுவார் உண்டா? |
| 55 | அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம். |
| 56 | அறிவீன இடத்தில் புத்தி கேளாதே. |
| 57 | அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம். |
| 58 | அறிவு இல்லார் தமக்கு ஆண்மையுமில்லை. |
| 59 | அறிவுடையாரை அரசனும் விரும்புவான். |
| 60 | அறுக்க முடியாதவ இடுப்புல ஆயிறத்தெட்டு அரிவாள். |
| 61 | அறுதாலி மகனுக்கு அங்கம் எல்லாம் சேட்டை . |
| 62 | அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியில் இறங்கித்தான் காசு வாங்கணும். |
| 63 | அறுப்புக் காலத்தில் எலிக்கு ஏழு கூத்தியாள். |
| 64 | அறுப்புக் காலத்தில் அற்ப எலிக்கு அஞ்சு பெண்டாட்டி. |
| 65 | அற்ப அறிவு அல்லற்கிடம். |
| 66 | அற்பருக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பர். |
| 67 | அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. |
| 68 | அள்ளிக் கொடுத்தால் சும்மா; அளந்து கொடுத்தால் கடன். |
| 69 | அள்ளாமல் குறையாது; சொல்லாமல் பிறவாது. |
| 70 | அழகுக்குச் செய்தது ஆபத்துக்கு உதவும். |

| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 71 | அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன? கழுதை மேய்ந்தாலென்ன? |
| 72 | அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். |
| 73 | அழுது அழுது பெத்தாலும் அவளே பெறவேண்டும் . |
| 74 | அம்மணக் குண்டி ஊரிலே கோமணம் கட்டுனவன் பைத்தியக்காரன். |
| 75 | அவசரம் என்றால் அண்டாவில்கூட கை நுழையாது. |
| 76 | அவுசாரி ஆனாலும் முகராசி வேணும். |
| 77 | ஆகாததும் வேகாததும் ஆண்டவனுக்கு ; அதிலும் கெட்டது அய்யருக்கு . |
| 78 | ஆசை அறுபது நாள்; மோகம் முப்பது நாள். |
| 79 | ஆடத் தெரியாதவள் மேடை கோணல் என்றாளாம். |
| 80 | ஆடிக் காற்றில் அம்மி பறப்பது போல. |
| 81 | ஆடிக்கு அழைக்காத மாமியாரைத் தேடிப்பிடித்து அடி. |
| 82 | ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம். |
| 83 | ஆடுற மாட்டை ஆடிக் கற; பாடுற மாட்டைப் பாடிக் கற. |
| 84 | ஆணில்லா மங்கைக்கு அழகு பாழ். |
| 85 | ஆணில்லாத் துக்கம் அழுதாலும் தீராது. |
| 86 | ஆணுக்கு அவக்கேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழைக்கேடு செய்யாதே. |
| 87 | ஆணை அடித்து வளர்; பெண்ணைப் போற்றி வளர். |
| 88 | ஆண் வாங்கினா கடன்; பெண் வாங்கினா சோரம். |
| 89 | ஆக்கங்கெட்ட அக்கா மஞ்சள் அரைத்தாலும் கரிகரியாக வரும். |
| 90 | ஆத்தா மனம் எரிய வாழான் ஒரு நாளும். |
| 91 | ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. |
| 92 | ஆத்து தண்ணி. அம்மா குடி; அய்யா குடி. |
| 93 | ஆனை இருந்தாலும் செத்தாலும் ஆயிரம் பொன். |
| 94 | ஆனை படுத்தால் ஆள் மட்டம். |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 95 | ஆனை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே. |
| 96 | ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம். |
| 97 | ஆனைக்கும் அடிசறுக்கும். |
| 98 | ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது. |
| 99 | ஆரால் கேடு, வாயால் கேடு. |
| 100 | ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு. |
| 101 | ஆறாவது பெண்ணானால் ஆறானது நீறாகி விடும். |
| 102 | ஆறின கஞ்சி பழங் கஞ்சி. |
| 103 | ஆறிலுஞ் சாவு; நூறிலுஞ் சாவு. |
| 104 | ஆறு கடக்கிறவரையில் அண்ணன் தம்பி; ஆறு கடந்தால் நீ யார்? நான் யார்? |
| 105 | ஆறு போவதே போக்கு; அரசன் சொல்வதே தீர்ப்பு. |
| 106 | ஆறுகெட நாணல் இடு; ஊரு கெட நூலை விடு. |
| 107 | ஆறுமில்லாப் பெண்ணுக்கு அண்டை வீட்டுக்காரன் அத்தை மகனாம். |
| 108 | ஆற்ற ஆள் இல்லை; தேற்ற யாரும் இல்லை |
| 109 | ஆற்றிலே கரைத்தாலும் அளந்து கரை. |
| 110 | ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு. |
| 111 | ஆறு நிறைய தண்ணி போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும். |
| 112 | ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. |
| 113 | ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை. |
| 114 | ஆளோ கட்டக்கரிச்சி; பேரோ பொன்னம்மாள். |
| 115 | ஆள் கொஞ்சமானாலும் ஆயுதம் மிடுக்கு. |
| 116 | ஆழம் தெரியாமல் காலை விடாதே. |
| 117 | ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலன் தரும். |
| 118 | ஆந்தைக்குத் தன் குஞ்சு ராஜாளிதான். |


| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 119 | இக்கரை(மாட்டு)க்கு அக்கரை பச்சை. |
| 120 | இஞ்சி இலாபம் மஞ்சளில். |
| 121 | இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான். |
| 122 | இட்ட உறவு எட்டு நாளைக்கு; நக்கின உறவு நாலு நாளைக்கு. |
| 123 | இடிவிழுந்தபின் பஞ்சாங்கம் பார்த்து என்ன பண்ண? |
| 124 | இந்திரனை சந்திரனை இலையாலே மறைப்பாள்; எமனைக் கையாலே மறைப்பாள். |
| 125 | இனம் இனத்தோடே; வெள்ளாடு தன்னோடே. |
| 126 | இன்னைக்கு செத்தா நாளைக்கு இரண்டு. |
| 127 | இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்கு குலை அறுப்பான். |
| 128 | இமையின் குத்தம் கண்ணுக்குத் தெரியாது. |
| 129 | இரக்கப் போனாலும் சிறக்கப் போ. |
| 130 | இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே. |
| 131 | இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே. |
| 132 | இரவல் வாங்கிய உடை வாடை தாங்காது. |
| 133 | இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை; இராச திசையில் கெட்டவனுமில்லை . |
| 134 | இராசா மகளானாலும் கொண்டவனுக்கு பெண்டுதான். |
| 135 | இராமனைப்போல் இராசா இருந்தால் அனுமானைப்போல் சேவகனும் இருப்பான். |
| 136 | இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இருக்குமா? |
| 137 | இரும்பு அடிக்கிற இடத்தில ஈக்கு என்ன வேலை ? |
| 138 | இறுகினால் களி , இளகினால் கூழ். |
| 139 | இறைத்த கிணறு ஊறும்; இறையாத கேணி நாறும். |
| 140 | இலை அறுத்தவன் குலை அறுக்கமாட்டானா? |
| 141 | இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 142 | இல்லாமல் பிறாவது; அள்ளாமல் குறையாது. |
| 143 | இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி அடிப்பான். |
| 144 | இளங்கன்று பயமறியாது. |
| 145 | இளமையிற் கல்வி கல் மேல் எழுத்து. |
| 146 | இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம். |
| 147 | இளமையில் முயற்சி முதுமையில் காக்கும். |
| 148 | இளைத்தவன் பெஞ்சாதி எல்லாருக்கும் மச்சினி. |
| 149 | இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா? |
| 150 | ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில். |
| 151 | ஈட்டி எட்டு முழம் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும். |
| 152 | ஈட்டுக்கும் பாட்டுக்கும் இருந்தாள் எடுகுமரி. |
| 153 | ஈயத்தைக் காச்சிக் காதில ஊத்தினாப் போல. |
| 154 | ஈர நாவிற்கு எலும்பில்லை. |
| 155 | உடம்பு போனால் போகிறது; கை வந்தால் போதும். |
| 156 | உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை. |
| 157 | உடல் ஒருவனுக்குப் பிறந்தது ; நாக்கு பலருக்குப் பிறந்தது. |
| 158 | உடைத்த சங்கு ஊத்துப் பறியுமா? |
| 159 | உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை. |
| 160 | உட்கார்ந்தால் அல்லவா படுக்க வேண்டும். |
| 161 | உடுத்திக் கெட்டான் பார்ப்பான்; உண்டு கெட்டான் வெள்ளாளன் . |
| 162 | உண்ட உடம்பிற்கு உறுதி; உழுத புலத்தில் நெல்லு. |
| 163 | உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது. |
| 164 | உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும். |
| 165 | உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும். |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 166 | உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது. |
| 167 | உயிரோடு இருக்கும்போது ஒரு வாய் சோறு இல்லை; கருமாதிக்கு கால் வீசை நெய்யாம். |
| 168 | உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா? |
| 169 | உரலில் தலையை விட்ட பிறகு உலக்கைக்கு அஞ்சலாமா? |
| 170 | உரலுக்கு ஒருபக்கம் இடி; மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி. |
| 171 | உரல் போய் மத்தளத்திடம் முறையிட்டதாம். |
| 172 | உறவு போகாமல் கெட்டது; கடன் கேட்காமல் கெட்டது. |
| 173 | உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன் . |
| 174 | உலை வைத்த சந்திலே சாறு காய்ச்சுவதுபோல் . |
| 175 | உலோபிக்கு இரட்டை செலவு. |
| 176 | உலோபியிடம் யாசித்தல் கடலில் கேணி வெட்டுவது போல. |
| 177 | உளவு இல்லாமல் களவு இல்லை. |
| 178 | உள்ளூரிலே ஓணான் பிடிக்காதவன் உடுப்பியிலே போயி உடும்பு பிடிப்பானா ? |
| 179 | உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை. |
| 180 | உழுகிற நாளில் ஊருக்குப் போய், அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டு வந்தது போல. |
| 181 | உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிச்சமில்லை. |
| 182 | ஊசியைக் காந்தம் இழுக்கும்; உத்தமனை நட்பு இழுக்கும். |
| 183 | ஊணுக்கு முந்து; வேலைக்குப் பிந்து. |
| 184 | ஊமையாய் இருந்தால் செவிடும் உண்டு. |
| 185 | ஊரார் பண்டம் உமிபோல்; தன் பண்டம் தங்கம் போல. |
| 186 | ஊரார் வீட்டு நெய்யே , என் பெண்டாட்டி கையே. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 187 | ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி. |
| 188 | ஊரை வளைத்தாலும் உற்ற துணையில்லை; நாட்டை வளைத்தாலும் நல்ல துணையில்லை. |
| 189 | ஊர் இருக்கு பிச்சை போட; ஓடு இருக்கு வாங்கிக்கொள்ள . |
| 190 | ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு. |
| 191 | ஊர் எல்லாம் சுற்றி; என் பேர் முக்தி. |
| 192 | ஊர் வாயை மூட உலைமுடி இல்லை. |
| 193 | எங்கே வெளைஞ்சாலும் காஞ்சிரங்காய் தேங்காயாகுமா? |
| 194 | எச்சில் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா? |
| 195 | எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லாக்கு. |
| 196 | எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். |
| 197 | எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும், பெண் புத்தி பின் புத்தியே. |
| 198 | எண்ணிச் செய்கிறவன் செட்டி; எண்ணாமல் செய்கிறவன் மட்டி. |
| 199 | எண்ணிச்செய்வது செட்டு; எண்ணாமல் செய்வது வேளாண்மை. |
| 200 | எண்ணை கண்ட இடத்தில் தடவிக்கொண்டு சீப்புகண்ட இடத்தில் சீவிக்கொள்வது போல. |
| 201 | எண்ணை முந்துதோ திரி முந்துதோ? |
| 202 | எதார்த்தவாதி வெகுசன விரோதி. |
| 203 | எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம். |
| 204 | எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கவேண்டும். |
| 205 | எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா? |
| 206 | எத்திலே பிள்ளை பெற்று இரவலிலே தாலாட்டுவது. |
| 207 | எய்தவன் இருக்க அம்பை நோவானேன் ? |
| 208 | எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம். |
| 209 | எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும். |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 210 | எருது நோய் காக்கைக்கு தெரியுமா? |
| 211 | எருமை மூத்திரம் எக்கியத்துக்கு ஆகுமா? |
| 212 | எருமை வாங்கும் முன்னே நெய் விலை கூறாதே. |
| 213 | எறும்பு ஊர கல்லுந் தேயும். |
| 214 | எறும்புந் தன் கையால் எண் சாண். |
| 215 | எலி அழுதால் பூனை விடுமா? |
| 216 | எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும். |
| 217 | எலி வளை யானாலும் தனி வளை வேண்டும். |
| 218 | எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம். |
| 219 | எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா? |
| 220 | எல்லார் தலையிலும் எட்டு எழுத்து; பாவி என் தலையில பத்தெழுத்து. |
| 221 | எல்லாத்துக்கும் ஒரு அழுகையாய் அழுதுவிடுங்கள். |
| 222 | எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது. |
| 223 | எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் தூக்குவது யார்? |
| 224 | எளியவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி. |
| 225 | எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும். |
| 226 | எள் என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான். |
| 227 | எள்ளுக்கு ஏழு உழவு ; கொள்ளுக்கு ஓர் உழவு. |
| 228 | எழுதாக் கடன் அழுதால் வருமா? |
| 229 | எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம். |
| 230 | எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான். |
| 231 | எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி. |
| 232 | எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர். |
| 233 | ஏதென்று கேட்பாருமில்லை; எடுத்துப் பிடிப்பாருமில்லை. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 234 | ஏன் என்பாரும் இல்லை; எடுத்துப் பாப்பாரும் இல்லை. |
| 235 | ஏரி நிறைந்தால் கரை கசியும். |
| 236 | ஏர் உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும். |
| 237 | ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம். |
| 238 | ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம். |
| 239 | ஏழை என்றால் எவருக்கும் எளிது |
| 240 | ஏழைபேச்சு அம்பலம் ஏறாது |
| 241 | ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல் ; செய்கிறவனுக்குத் தலைச்சுமை. |
| 242 | ஐங்காயம் இட்டு அரைத்துக் கரைத்தாலும் தன் நாற்றம் போகாதாம் பேய்ச்சுரைக்காய்க்கு.. |
| 243 | ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. |
| 244 | ஐயமான காரியத்தைச் செய்தல் ஆகாது. |
| 245 | ஐயர் வருகிறவரை அமாவாசை நிற்குமா? |
| 246 | ஒட்டடத்கூத்தன் பாட்டுக்கு இரட்டை தாழ்ப்பாள். |
| 247 | ஒத்துமையில்லாக் குடி ஒருமிக்கக் கெடும். |
| 248 | ஒரு காசு சேத்தா இரு காசு தேறும். |
| 249 | ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை. |
| 250 | ஒரு கை (அல்லது வெறுங்கை) முழம் போடுமா? |
| 251 | ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா? |
| 252 | ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை. |
| 253 | ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா? |
| 254 | ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். |
| 255 | ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு; நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத் தெருவிலே ஓடு. |
| 256 | ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லுதல். |



| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 257 | ஒருவனாய் பிறந்தால் தனிமை; இருவராய்ப் பிறந்தால் பகைமை. |
| 258 | ஒருவர் அறிந்தால் இரகசியம்; இருவர் அறிந்தால் அம்பலம். |
| 259 | ஒளியத் தெரியாம தலையாரி வீட்டில் ஒளிந்தது போல. |
| 260 | ஒதிய மரம் தூணாமோ? ஒட்டாங் கிளிஞ்சல் காசாமோ? |
| 261 | ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு; அகப்பட்டவனுக்கு அட்டமத்திலே சனி. |
| 262 | ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு. |
| 263 | ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி. |
| 264 | ஓட்டை பானையிலும் சர்க்கரை இருக்கும். |
| 265 | ஓர் ஊருக்கு ஒரு வழியா? ஒன்பது வழி. |
| 266 | ஓர் ஊர்ப்பேச்சு ஓர் ஊருக்கு ஏச்சு. |
| 267 | ஔவை சொல்லுக்கு அச்சம் இல்லை. |
| 268 | கக்கின பிள்ளை தக்கும். |
| 269 | கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா? |
| 270 | கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறிக் கைவிட்டனும் கெட்டான். |
| 271 | கடன் வாங்கியும் பட்டினி; கல்யாணம் பண்ணியும் சந்நியாசி. |
| 272 | கடலுக்குக் கரை போடுவார் உண்டா? |
| 273 | கடலைத் தாண்ட ஆசையுண்டு; கால்வாயைத் தாண்டக் கால் வல்லை. |
| 274 | கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது? |
| 275 | கடல் திடலாகும்; திடல் கடலாகும். |
| 276 | கடல் மீனுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா? |
| 277 | கடவுளை நம்பினோர் கைவிடப் படார். |
| 278 | கடுகத்தனை நெருப்பானாலும் போரைக் கொளுத்திவிடும். |
| 279 | கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா? |

| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 280 | கடுகு களவும் களவுதான்; கற்பூரம் களவும் களவுதான். |
| 281 | கடுகு போனதைத் தேடுவார்; மலை போறது தெரியாது. |
| 282 | கடுங்காற்று மழை கூட்டும்; கடுஞ் சிநேகம் பகை கூட்டும். |
| 283 | கடுஞ் சொல் தயவைக் கெடுக்கும். |
| 284 | கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது. |
| 285 | கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த பொய்யும் எத்தனை நாள் நிற்கும். |
| 286 | கட்டின சேலை பாம்பாய் கடித்ததாம். |
| 287 | கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை. |
| 288 | கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்கு பல வீடு. |
| 289 | கட்டை உள்ளவரை கஷ்டமுண்டு. |
| 290 | கணக்கன் கணக்கறிவான்; தன் கணக்கைத் தான் அறியான். |
| 291 | கணக்கன் கணக்கைத் தின்னாவிடில், கணக்கனை கணக்கு தின்று விடும். |
| 292 | கணக்கறிந்த பிள்ளையிருந்தால் வீட்டில் வழக்குக்குக் குறைவில்லை. |
| 293 | கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும். |
| 294 | கண் கண்டது கை செய்யும். |
| 295 | கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா? |
| 296 | கண்களை விற்றுச் சித்திரம் வாங்குதல் போல். |
| 297 | கண்டது சொல்ல வந்திடும் பகை. |
| 298 | கண்டதே காட்சி கொண்டதே கோலம். |
| 299 | கண்டால் ஒரு பேச்சு; காணாவிட்டால் ஒரு பேச்சு. |
| 300 | கண்டால் காமாச்சி; காணாட்டி கம்மனாட்டி. |
| 301 | கண்ணாலே கண்டாலும் மண்ணாலே மறை |
| 302 | கண்ணிற் பட்டால் கரிக்குமா? புருவத்திற் பட்டால் கரிக்குமா? |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 303 | கண்ணிலே குத்தின விரலை வெட்டியா விடமுடியும்? |
| 304 | கண்வழியே சீவன் கடகடவெனப் போனாலும் கழுதை பொதி சுமந்தே ஆகணும். |
| 305 | கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா? |
| 306 | கனிந்த பழம் தானே விழும். |
| 307 | கன்று கூடி களமடிக்க வைக்கோலுமாகாது ; செத்தையும் ஆகாது. |
| 308 | கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு. |
| 309 | கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை விற்றா விடியும். |
| 310 | கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். |
| 311 | கரணம் தப்பினால் மரணம். |
| 312 | கரிவிற்ற பணம் கறுப்பாய் இருக்குமா? |
| 313 | கருமத்தை முடிக்கிறவன் கட்டத்தைப் பாரான். |
| 314 | கரும்பு கசக்கிறது வாய்க் குற்றம். |
| 315 | கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? |
| 316 | கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாமா? |
| 317 | கறையான் புற்று பாம்புக்கு வீடு. |
| 318 | கற்கையில் கல்வி கசப்பு; கற்றபின் அதுவே இனிப்பு. |
| 319 | கற்பில்லா அழகு; வாசமில்லாப் பூ |
| 320 | கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு. |
| 321 | கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு. |
| 322 | கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் |
| 323 | கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது போல. |
| 324 | கல்லடிச் சித்தன் போனவழி; காடுமேடெல்லாம் தவிடுபொடி. |
| 325 | கல்லாடம் [ நூல்] படித்தவனோடு மல் ஆடாதே. |
| 326 | கல்லாதவரே கண்ணில்லாதவர். |

| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 327 | கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம். |
| 328 | கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன். |
| 329 | கல்வி அழகே அழகு. |
| 330 | கல்விக்கு இருவர்; களவுக் கொருவர். |
| 331 | கல்வியற்ற இரம்பையைவிட கல்வியறிவுள்ள சாதரணப் பெண் மேல். |
| 332 | களை பிடுங்காப் பயிர் காற்பயிர். |
| 333 | கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதைவிடக் கற்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பது மேல். |
| 334 | கள்ள மனம் துள்ளும். |
| 335 | கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியு மட்டும் திருடலாம். |
| 336 | கள்ளம் பெரிதோ? காப்பு பெரிதோ! |
| 337 | கள்ளிக்கு முள்வேலியா? |
| 338 | கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்லுவான். |
| 339 | கஞ்சி கண்ட இடம் கைலாசம் ; சோறு கண்ட இடம் சொர்க்கம். |
| 340 | கழுதை அறியுமா கற்பூர வாசனை? |
| 341 | கவலை உடையோர்க்குக் கண்ணுறக்கம் வராது. |
| 342 | காகம் திட்டி மாடு சாகாது. |
| 343 | காக்கா கர் என்றால் (நடிக்கும் மனைவி)கணவனை இறுகக் கட்டிக்கொள்வாளாம் |
| 344 | காக்காய்க்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு. |
| 345 | காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல். |
| 346 | காக்காயும் , நாவிதனும் வாயை மூடமாட்டார்கள். |
| 347 | காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும்; காற்றைப் போலப் பறக்கவும் வேண்டும். |
| 348 | காடிச் சோத்துக்குக் கரணம் போடுறா. |
| 349 | காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான். |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 350 | காடுவெட்டிக்கு கம்பு பிடுங்கப் பயமா? |
| 351 | காட்டுப் பூனைக்குச் சிவராத்திரி விரதமா ? |
| 352 | காட்டில் ஆனையைக் காட்டி வீட்டில் பெண்ணைக் கொடுப்பதுபோல். |
| 353 | காண ஒரு தடவை; கும்பிட ஒரு தடவையா? |
| 354 | காணாமல் கண்ட கம்பங்கூழை சிந்தாமல் குடி. |
| 355 | காணி ஆசை கோடி கேடு. |
| 356 | காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம். |
| 357 | காயும் கனியும் உண்டானால் கார்த்திகையில் திருமணம். |
| 358 | காய் சுமையைக் கொடி தாங்காதா? |
| 359 | காய்த்த மரம்தான் கல்லடிபடும். |
| 360 | காய்ந்தும் கெடுத்தது; பெய்தும் கெடுத்தது. |
| 361 | காரியமாகும் வரையில் கழுதையானாலும் காலைப்பிடி. |
| 362 | காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ? |
| 363 | கார்த்திகைக்குப் பின் மழையும் இல்லை; கர்ணனுக்குப்பின் கொடையும் இல்லை . |
| 364 | காற்றில்லாமல் தூசி பறக்குமா? |
| 365 | காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். |
| 366 | காலம் அறிந்து பிழைக்காதவன் வால் அறுந்த குரங்கு ஆவான். |
| 367 | காலம் செய்வதை ஞாலம் செய்யாது. |
| 368 | காலம் போகும் வார்த்தை நிற்கும்; கப்பல் போகும் துறை சேரும். |
| 369 | காலுக்குதக்க செருப்பும், கூலிக்குத் தக்க உழைப்பும். |
| 370 | கால் வயிற்றுக் கஞ்சியானாலும் கடன் இல்லா கஞ்சி. |
| 371 | காவடியின் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும். |
| 372 | காஞ்சவோலை விழக் குருத்தோலை சிரிப்பது போல். |
| 373 | கிட்டாதாயின் வெட்டென மற. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 374 | கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்வோமா? |
| 375 | கிணற்றுத் தவளைக்கு நாட்டு நடப்பு தெரியுமா? |
| 376 | கிழவனுக்கு வாக்கப்படுறதைவிடக் கேணியில் விழுவது மேல். |
| 377 | கீர்த்தியால் பசி தீருமா? |
| 378 | கீறி ஆற்றினால் புண் ஆறும். |
| 379 | குங்குமம் சுமந்த கழுதை மணம் அறியுமா? |
| 380 | குசவனுக்கு ஆறுமாதம்; தடிக்காரனுக்கு அரை நாழிகை. |
| 381 | குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும். |
| 382 | குடிஇருந்த வீட்டிலே கொள்ளி வைக்கலாமா? |
| 383 | குடிகாரன் பேச்சு விடிஞ்சாலே போச்சு. |
| 384 | குடும்பத்தில் இளையவனும் கூத்தாடியில் கோமாளியும் ஆகாது. |
| 385 | குடுக்காத இடையன் சினை ஆட்டை காட்டுன மாதிரி |
| 386 | குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும். |
| 387 | குணத்தை மாற்றக் குருவில்லை. |
| 388 | குணம் இல்லா வித்தை எல்லாம் பாழ். |
| 389 | குலத்தைவிடக் குணமே பெரிது. |
| 390 | குளத்திடம் கோவித்துக் குண்டி கழுவாம இருந்தால் எப்படி? |
| 391 | குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுவது போல். |
| 392 | குதிரை இருப்பு அறியும், கொண்ட பெண்டாட்டி குணம் அறிவாள். |
| 393 | குதிரை ஏறாமல் கெட்டது; கடன் கேளாமல் கெட்டது. |
| 394 | குதிரை குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை. |
| 395 | குந்தி இருந்து தின்றால் குன்றும் மாளும். |
| 396 | குப்பை உயரும்; கோபுரம் தாழும். |
| 397 | குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா? |
| 398 | குரங்கு கையில் பூமாலை கிடைத்ததுபோல். |



| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 399 | குரங்குக்குப் புத்திசொல்லித் தூக்கணாங்குருவி கூண்டு இழந்தது. |
| 400 | குரு இல்லார்க்கு வித்தையுமில்லை; முதல் இல்லார்க்கு ஊதியமில்லை. |
| 401 | குரு மொழி கேளாதவனும் தாய் சொல்லுக்கு அடங்காதவனும் சண்டி. |
| 402 | குரு மொழி மறந்தோன் திரு அழிந்து அழிவான். |
| 403 | குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மையிட்டுமென்ன? |
| 404 | குரைக்கிற நாய் கடிக்காது. |
| 405 | குறுணிக்காரனுக்கு வாக்கப்பட்டு பதக்கு, பதக்கு என்றால் எப்படி? |
| 406 | குறும்பியுள்ள காதும் குற்றமுள்ள நெஞ்சும் குறுகுறு என்குமாம் |
| 407 | குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. |
| 408 | குல வழக்கும் இட வழக்கும் கொஞ்சத்தில் தீராது. |
| 409 | குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பே. |
| 410 | குலம் குப்பையிலே, பணம் பந்தியிலே. |
| 411 | குளிராத வீடும் கூத்தியும் இருந்தா, மயிரான வெள்ளாமை விளைஞ்சா என்ன? விளையாட்டி என்ன? |
| 412 | குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே. |
| 413 | கூரை ஏறிக் கோழி பிடிக்கமுடியாதவன் வானத்தைக் கீறி வைகுண்டத்தைக் காட்டுவானா? |
| 414 | கூரைமேலே சோறு போட்டால் ஆயிரம் காகம். |
| 415 | கூறு கெட்ட மாடு ஏழு கட்டுப் புல் திங்குதாம். |
| 416 | கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. |
| 417 | கூத்தாடி கிழக்கே பார்த்தான்; கூலிக்காரன் மேற்கே பார்த்தான். |
| 418 | கெடுமதி கண்ணுக்குத் தெரியாது. |
| 419 | கெடுவான் கேடு நினைப்பான். |
| 420 | கெட்டாலும் செட்டியே; கிழிந்தாலும் பட்டு பட்டுதான். |
| 421 | கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும். |


| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 422 | கெட்டும் பட்டணம் சேர். |
| 423 | கெண்டையைப் போட்டு வராலை இழு. |
| 424 | கெரடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை என்பான். |
| 425 | கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல. |
| 426 | கேடு வரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே. |
| 427 | கேட்டதெல்லாம் நம்பாதே? நம்பினது எல்லாத்தையும் சொல்லாதே? |
| 428 | கேள்விப் பேச்சில் பாதிதான் நிசம். |
| 429 | கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை. |
| 430 | கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறாது. |
| 431 | கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டாம். |
| 432 | கையில் பொருள் இல்லையென்றால் கட்டினவளும் பாராள். |
| 433 | கையாளத ஆயுதம் துருப்பிடிக்கும். |
| 434 | கையிலே காசு வாயிலே தோசை. |
| 435 | கையில் பொருள் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர். |
| 436 | கையில் பிடிப்பது துளசி மாலை; கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோலாம். |
| 437 | கையில் பொருளில்லை என்றால் கட்டுக் கழுத்தியும் திரும்பிப் பாராள். |
| 438 | கையூன்றிக் கரணம் போடவேண்டும். |
| 439 | கொடுத்தாலும் கல்வி குறையாது. |
| 440 | கொடிக்கு காய் கனமா? |
| 441 | கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம். |
| 442 | கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது. |
| 443 | கொடுத்தைக் கேட்டால் வந்திடும் பகை. |
| 444 | கொடும்பாவியானாலும் கொண்ட மாமியார் வேண்டும். |
| 445 | கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியா? |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 446 | கொண்டவன் அடிக்கக் கொழுந்தன் மேல் விழுந்தாளாம் |
| 447 | கொண்டானும் கொடுத்தானும் ஒன்று; கலியாணத்தைக் கூட்டி வைத்தவன் வேறு. |
| 448 | கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சான். |
| 449 | கொல்லன் தெருவில் ஊசி விலைபோகாது. |
| 450 | கொல்லைக் காட்டு நரி சலசலப்புக் அஞ்சுமா? |
| 451 | கொள்ளிக்கு எதிர்போனாலும், வெள்ளிக்கு எதிர்போகலாகாது.. |
| 452 | கொள்ளும் வரைக்கும் கொண்டாட்டம்; கொண்ட பிறகு திண்டாட்டம். |
| 453 | கோள் சொல்பவன் கொடுந்தேள். |
| 454 | கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமற் காணி கொடுப்பது நல்லது. |
| 455 | கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு; பாத்திரமறிந்து பிச்சையிடு. |
| 456 | கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு. |
| 457 | கோபம் சண்டாளம். |
| 458 | கோபுரத்து பூதம்போல. |
| 459 | கோயிற் பூனை தேவர்க்கு அஞ்சுமா? |
| 460 | கோயில் சோத்துக்கு குமட்டிண தேவடியா. |
| 461 | கோளுஞ் சொல்லி கும்பிடுவானேன்? |
| 462 | கோழி மிதித்துக் குஞ்சு சாகாது. |
| 463 | கோணல் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி. |
| 464 | சட்டி ஓட்டையானா என்ன? சோறு வெந்தா போதும். |
| 465 | சண்டிக் குதிரை; நொண்டிச் சாரதி. |
| 466 | சத்தியமே வெல்லும், அசத்தியம் கொல்லும். |
| 467 | சந்தியிலே அடித்ததற்குச் சாட்சியா? |
| 468 | சந்திரனைப் பாத்த கண்ணுக்கு சனியனைப் பாத்தா போல. |
| 469 | சந்திரனைப் பார்த்து நாய் குரைப்பது போல. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 470 | சந்நியாசி வீடு திண்ணையிலே. |
| 471 | சப்பாணிக்கு சந்து ஒடிந்த பெண் போதாதோ? |
| 472 | சம்பளம் இல்லாத சேவகனும், கோபமில்லாத எசமானும். |
| 473 | சருகைக் கண்டு தணலஞ்சுமா? |
| 474 | சருகு பொருக்கினாலும் குளிர் காய நேரமில்லை. |
| 475 | சர்க்கரை என்றால் தித்திக்குமா? |
| 476 | சாக்கடைப் புழுவும் சக்களத்தியும் ஒண்ணு. |
| 477 | சாட்சிக்காரனின் காலில் விழுவதை விட சண்டைக்காரனின் காலில் விழுவது மேல். |
| 478 | சித்திரத்தைக் குத்தி அப்புறத்தே வைப்பதுபோல். |
| 479 | சிறு பிள்ளை வேளாண்மை விளைஞ்சும் வீடு வந்து சேராது. |
| 480 | சீரங்கத்து உலக்கை மாத்துவது போல. |
| 481 | சீலை இல்லைன்னு சித்தி வீட்டுக்குப் போனாளாம்; அவள் ஈச்சம் பாயை கட்டிகிட்டு எதுக்கே வந்தாளாம் . |
| 482 | சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம். |
| 483 | சூடு கண்ட பூனை அடுப்பங்கரையில் சேராது . |
| 484 | செல்லம் சீரழிக்கும். |
| 485 | செல்லம் சொல்லுக்கு அஞ்சாது. |
| 486 | சொல்லிக் கொடுத்த புத்தியும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளுக்குக் கூட வரும்? |
| 487 | சோத்துல கெடக்குற கல்லை எடுக்காதவன் சேத்திலே கெடக்குற எருமையத் தூக்குவானா ? |
| 488 | தடியெடுத்தவன் தண்டக்காரன். |
| 489 | தனக்கு அழகு மொட்டை; பிறருக்குக் கொண்டை. |
| 490 | தனக்கு என ஒருத்தி இருந்தால் தலைமாட்டில் குந்தி அழுவாள். |
| 491 | தனிமரம் தோப்பாகாது. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 492 | தன் பெஞ்சாதியைத் தான் அடிக்க தலையாரியின் அனுமதியா? |
| 493 | தன் வினை தன்னைச் சுடும். |
| 494 | தம்பியுள்ளவன் படைக்கு அஞ்சான். |
| 495 | தலைக்கு மிஞ்சின ஆக்கினை இல்லை; கோவணத்தை மிஞ்சிய வறுமையும் இல்லை. |
| 496 | தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன. |
| 497 | தள்ளி இருக்க உறவு; கிட்ட வந்தால் பகை. |
| 498 | தாயிற் சிறந்த கோவிலுமில்லை. |
| 499 | தாயில்லாப் பிள்ளை தறுதலை. |
| 500 | தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு. |
| 501 | தாயை தண்ணீர்த் துறையில் பார்த்தால் பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டாம். |
| 502 | தாயை மறக்கடிக்கும் தயிறும் சோறும். |
| 503 | தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை. |
| 504 | தாய் அறியா சூல் உண்டோ? |
| 505 | தாய் பொறுக்காததை ஊர் பொறுக்காது. |
| 506 | தாய் வார்த்தை கேட்கா பிள்ளை நாய் வாயில் சீலை. |
| 507 | தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான். |
| 508 | திருவாக்குக்கு எதிர்வாக்குக்கு ஏது? |
| 509 | துளசியின் வாசமும் முள்ளின் கூர்மையும் முளையிலே தெரியும். |
| 510 | துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். |
| 511 | தூக்கி வளர்த்த பிள்ளையும் துடையில் வைத்து தைத்த இலையும் உருப்படாது |
| 512 | தூர்ந்த கிணற்றைத் தூர் எடுக்காதே. |

# பழமொழி - 615



| | |
|---|---|
| 513 | தெய்வம் வரங் கொடுத்தாலும் பூசாரி விடாதது போல். |
| 514 | தேரோட போச்சு திருநாளு; தாயோட போச்சு பிறந்தவீடு. |
| 515 | தைமாத மழை தவிட்டுக்கு ஆகுமா? |
| 516 | நக்கிற நாய்க்குச் செக்கென்ன? சிவலிங்கமென்ன? |
| 517 | நச்சவாயன் வீட்டிலே நாறவாயன் பெண் எடுத்தது போல். |
| 518 | நடுக்கடலுக்குப் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும். |
| 519 | நம்பமாட்டாதவன் பெண்டாட்டிக்கு நாற்பது பேர் மாப்பிள்ளை. |
| 520 | நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை. |
| 521 | நாணமில்லா நாகுவுக்கு நாலு திக்கும் வாசல்படி. |
| 522 | நான் படும் பாடு நாய்தானும் படாது. |
| 523 | நித்திய கண்டம் பூரண ஆயுசு. |
| 524 | நிறைகுடம் தளும்பாது. |
| 525 | நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவது போல். |
| 526 | நிழலின் அருமை வெய்யிலில் தெரியும். |
| 527 | நெருப்பு இல்லாமல் புகையாது. |
| 528 | பசி வந்தால் பத்தும் பறந்திடும். |
| 529 | படிக்கிறது தேவாரம்; இடிக்கிறது சிவன் கோயில். |
| 530 | படிக்கிறது இராமாயணம்; இடிக்கிறது பெருமாள் கோயில். |
| 531 | பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும். |
| 532 | பத்தாம் பேறு பாடையில் வைக்கும். |
| 533 | பத்து அரிசியும் வேகவில்லை; பாவியின் ஆவி போகவில்லை. |
| 534 | பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து. |
| 535 | பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது. |
| 536 | பனை மரத்தடியில் பால் குடித்தது போல. |
| 537 | பழமொழியில் உமி கிடையாது. |

| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 538 | பழுத்த ஓலையைப் பார்த்து குருத்தோலை சிரித்ததுபோல். |
| 539 | பள்ளத்திலே இருந்தா பொண்டாட்டி; மேட்டிலே இருந்தா அக்கா |
| 540 | பழுத்த பழம் கொம்பிலே தங்காது. |
| 541 | பங்குனியில பருக்காது; சித்திரையில சிறுக்காது. |
| 542 | பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும். |
| 543 | பாம்பாட்டிக்குப் பாம்பாலே சாவு, கள்ளனுக்கு களவாலே சாவு. |
| 544 | பிச்சை எடுத்ததாம் பெருமாள்; அதைப் பறித்ததாம் அனுமார். |
| 545 | பிள்ளையாருக்குப் பெண் தேடுவது போல். |
| 546 | பிள்ளையின் அருமை பெற்றவளுக்குத்தான் தெரியும். |
| 547 | பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது போல். |
| 548 | புதுமைக்கு வண்ணான் கரைகட்டி வெளுப்பான். |
| 549 | புலி பசித்தாலும் புல் தின்னாது. |
| 550 | பூ மலர்ந்து கெட்டது; வாய் விரிந்து கெட்டது. |
| 551 | பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும். |
| 552 | பூனை கொன்ற பாவம் உன்னோடு; வெல்லம் தின்ற பாவம் என்னோடு. |
| 553 | பெண் என்றால் பேயும் இரங்கும். |
| 554 | பெண்ணுக்குப் பொன் இட்டுப்பார்; சுவற்றுக்கு மண் இட்டுப்பார். |
| 555 | பெண்ணின் கோணல் பொன்னாலே நிமிரும். |
| 556 | பெத்த மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு. |
| 557 | பெற்ற தாய் மூதேவி; புகுந்த தாரம் சீதேவி. |
| 558 | பெற்றவள் வயிற்றைப் பாப்பாள்; பெண்டாட்டி மடியைப் பாப்பாள். |
| 559 | பேயும் அறியும் பெஞ்சாதி பிள்ளையை. |
| 560 | பொறுத்தார் அரசாள்வார்; பொங்கினார் காடாள்வார். |
| 561 | பொல்லாக் காலம் சொல்லாமல் வந்தது. |
| 562 | போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. |



| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 563 | போன மச்சான் திரும்பி வந்தான். |
| 564 | போரோட திங்கிற மாட்டுக்குப் புடுங்கிப் போட்டா காணுமா ? |
| 565 | மகன் செத்தாலும் சரி; மருமகள் தாலி அறுக்க வேண்டும். |
| 566 | மதி இல்லா விண்ணானேன்; மருந்து இல்லா புண்ணானேன். |
| 567 | மனம் போல மாங்கலியம். |
| 568 | மனைவி இல்லாதவன் அரை மனிதன். |
| 569 | மரம் வைத்தவன் தண்ணி ஊத்துவான். |
| 570 | மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். |
| 571 | மறைவிலே பெண்டாட்டி; மந்தையிலே அக்கச்சி. |
| 572 | மலை போல் வந்தது பனிபோல் விலகியது. |
| 573 | மலை அத்தனை சாமிக்குக் கடுகத்தனை கற்பூரம். |
| 574 | மழைவிட்டும் தூவானம் விடாததுபோல். |
| 575 | மாடு மேய்க்கவும் வேணும்; மச்சினனுக்குப் பெண் பார்க்கவும் வேணும். |
| 576 | மாமியா உடைச்சா மண் குடம்; மருமகள் உடைச்சா பொன் குடம். |
| 577 | மாமியார் சாகாளோ? மனக் கவலை தீராதோ? |
| 578 | மாமியார் செத்த ஆறாம் மாதம் மருமகன் கண்ணில் நீர் வந்ததாம். |
| 579 | மின்னுவதெல்லாம் பொன்னல்ல. |
| 580 | முடக் குதிரைக்குச் சறுக்கினதுதான் சாக்கு. |
| 581 | முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல. |
| 582 | முன்கை நீண்டால் முழங்கை நீளும். |
| 583 | முலை கொடுத்து வளத்தவள் மூதேவி; முந்தானை போட்டவள் சீதேவி. |
| 584 | முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும். |
| 585 | முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் |
| 586 | மூக்குள்ளவரை சளி போகாது. |
| 587 | மூன்று முறை முகத்தில் அடித்தால் முக்கண்ணனுக்கும் கோபம் வரும் |



| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 588 | மேயிற மாட்டை நக்கற மாடு கெடுக்கும். |
| 589 | மொட்டச்சிக்குத் தகுந்த மூக்கறையன். |
| 590 | மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல். |
| 591 | யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன். |
| 592 | யானை வரும் பின்னே' மணியோசை வரும் முன்னே. |
| 593 | யார் இட்ட சாபமோ? அடிநாளின் தீவினையோ? |
| 594 | வரும் விதி வந்தா பட்டே ஆகவேண்டும். |
| 595 | வளத்த பிள்ளை சோறுபோடாவிடிலும் வைத்த பிள்ளை சோறு போடும். |
| 596 | வழி வழியாப் போகும்போது விதி விதியா வருது. |
| 597 | வாய் கருப்பட்டி; கை கருணைக் கிழங்கு. |
| 598 | விடிய விடிய ராமாயணம் கேட்டு, விடிந்த பிறகு சீதைக்கு ராமன் சித்தப்பனாம். |
| 599 | விடியா மூஞ்சி வேலைக்கு போனால், வேலை அகப்பட்டாலும் கூலி கிடைக்காதாம். |
| 600 | வித்தைக்கு அழிவில்லை. |
| 601 | விரலுக்குத் தகுந்த வீக்கம். |
| 602 | விறகு வெட்டிக்குத் தலைவலி வந்தா விறகால ரெண்டு போடு. |
| 603 | விலை மோரில் வெண்ணை எடுத்து விடிய விடியக் கல்யாணம் செய்வாளாம். |
| 604 | விளையும் பயிர் முளையிலே தெரியும். |
| 605 | வீட்டுப் பெஞ்சாதி வேம்பு; நாட்டுப் பெஞ்சாதி கரும்பு. |
| 606 | வீண் இழவாம் வெங்காயம்; உரிக்க உரிக்கப் பேரிழவாம். |
| 607 | வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன். |
| 608 | வெண்ணெய் திரண்டுவர தாழி உடைவது போல். |
| 609 | வெறும் வாய் மெல்லுகிறவளுக்கு அவல் கிடைச்சதுபோல . |
| 610 | வெளுத்ததெல்லாம் பாலல்ல. |



| அ | க |ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|

# பழமொழி - 615



| | |
|---|---|
| 611 | வெள்ளியில போடுறதும், வேசிக்குப் போடுறதும் ஒண்ணு. |
| 612 | வேக நேரமிருந்தாலும் சாக நேரமில்லை. |
| 613 | வேலிக்கு ஓணான் சாட்சி. |
| 614 | வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாச்சு. |
| 615 | வைக்கோற் போர் நாய் போல. |



| அ | க | ச | த | ப | ம | ந | ய | வ |
|---|---|---|---|---|---|---|---|---|



# பழமொழி - 615

# முற்றிற்று